# <u>செய்தி வெளியீடு</u>

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள்படைவீரர்களின் மற்றும் கைம்பெண்களின் கவனத்திற்கு.

+2 தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் முன்னாள்படைவீரர்களின் மற்றும் கைம்பெண்களின் சிறார்களுக்கு ஊக்கப்பரிசுத் தொகை ரூ. 5,000/–ம், மாநில அளவில் முதலிடம் பெறும் சிறார்களுக்கு ரூ.10,000/–ம் வழங்கும் திட்டம் 2011– 2012ம் கல்வி ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெறும் சிறார்களுக்கு ரூ. 3,000/–ம், மாநில அளவில் இரண்டாமிடம் பெறும் சிறார்களுக்கு ரூ. 7,000 /–ம் வழங்கும் திட்டம் 2015–2016ம் கல்வி ஆண்டு முதல் கூடுதலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே சேலம் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள்படைவீரர்கள்/விதவைகள் தங்களின் சிறார்கள் 95%–ற்கு மேல் மதிப்பெண் பெற்றிருப்பின் விண்ணப்பங்களை கீழ்க்காணும் ஆவணங் களுடன் உடனடியாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. அசல் படைவிலகல் சான்று
2. 12ம வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல்
3. முன்னாள் படைவீரர்/விதவையரின் அடையாள அட்டை நகல்

உதவி இயக்குநர்.
முன்னாள் படைவீரர் நலன்.
சேலம் 636 001.